**தலைப்பு 118 – கமத்தொழில் அமைச்சு**

**-----------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு – 118 கமத்தொழில் அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் கமத்தொழில் அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 01 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தினை தவிர்த்து, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கமத்தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைபழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டுடன் இணங்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கடந்த வருடத்திற்குரிய அறிக்கையின் பந்திக்கான தொடர்பு | செயற்படுத்தப்படாத பரிந்துரைகள் | இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|
| 3.1.1 | ரூபா 63 மில்லியனான வைப்புப் பணம் அறவிடப்பட வேண்டும். | 3.7 உ |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### 1.6.1.1 வருமானப் பெறுவனவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏ.சீ.ஏ - 1(i) மாதிரிக்கமைய 2003.07.00 வருமானக் குறியீட்டின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிலுவை வருமானக் கூற்றின் முற்பணம் 3 வருடங்களுக்கான தேறிய வருமானங்களை சேகரித்தலின் கீழ் 2022 ஆம் ஆண்டுக்கான தேறிய வருமானங்களை சேகரித்தல் ரூபா 437,085,714 ஆக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் சரியான பெறுமதி ரூபா 219,195,182 ஆகும். | நிலுவை வருமானக் கூற்றில் பதிவு செய்யும் போது தவறுதலாக இந்த வழு ஏற்பட்டுள்ளது. | வருமானக் கூற்றுக்கு சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஏ.சீ.ஏ - 1(i) மாதிரிக்கமைய 2003.07.00 வருமானக் குறியீட்டின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிலுவை வருமானக் கூற்றில் மீளாய்வாண்டிற்குரிய நிலுவை வருமானம் இணங்காணப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் கிடைத்த வருமானம் ரூபா 961.12 மில்லியனாக காணப்பட்டதுடன், அவற்றின் ரூபா 60.4 மில்லியன் கூட்டுத்தொகை 2018/19 பெரும்போகம், 2020/21 பெரும்போகம் மற்றும் 2021 சிறுபோகத்திற்கு உரியதாக காணப்பட்டதுடன் எஞ்சிய ரூபா 900.7 மில்லியன் 2022/23 பெரும் போகத்தில் நெல் இருப்பிணை | நிலுவை வருமானம் இணங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விற்றமையால் கிடைத்த வருமானம் ஆகும். அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DFD/MD/GPPP/Maha-2022/23 ஆம் இலக்க 2023.07.17 ஆந் திகதிய கடிதத்தின் 2.4 ஆம் இலக்கத்தின் பிரகாரம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னர் அரிசியை திறந்த போட்டி அடிப்படையில் விலைக் கேள்வி கோரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருமானம் 2003.07.00 அரசின் நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் வருமானத் தலைப்பிற்கு செலவு வைப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதனால் உள்ளபடியான வருமானம் மற்றும் மதிப்பிடப்பட்ட வருமானம் ஆகியவற்றுக்கிடையே உயர்வான பெறுமதியொன்று அறிக்கையிடப்பட்டுள்ளது. | |
| (இ) | திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு ரூபா 350,000,000 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான வருமானம் ரூபா 961,121,370 ஆனமையால், வேறுபாடு ரூபா 611,121,370 அதாவது 175 சதவீதமான பெறுமதி ஆகும். வருமான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு அதனை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சரியான மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டிற்கான மொத்த நிலுவை வருமானமான ரூபா 437,085,714 இனால் மீளாய்வாண்டின் போது ரூபா 60,407,579 அறவிடப்பட்டு தொடர்ந்தும் நிலுவை வருமானம் ரூபா 376,678,135 ஆக காணப்பட்டதுடன், அது ஒட்டுமொத்த நிலுவை வருமானத்தில் 86 சதவீதம் எனும் உயர்வான பெறுமதியை கொண்டிருந்தது. மாவட்ட செயலகங்களின் ஊடாக வரமானம் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை சேகரித்தல் செயற்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | சேகரித்தல் தொடர்பான அமைச்சின் கட்டுப்பாட்டிலான பதிவுகள் நிலுவை வருமானத்தை சேகரிப்பதிலான செயற்திறனின்மைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | | |
| (உ) | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படும் லங்கா சதொச மூலம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதிய உள்ளபடியாக பெற வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 376,678,135 ஆன போதிலும், கணக்காய்வாளர் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களின் பிரகாரம் அந்த நிலுவை தொகை ரூபா 35,048,576 என்பது அவதானிக்கப்பட்டது. | லங்கா சதொசாவிலிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் தொடர்பில் மேலதிக விசாரணை மேற்கொள்ள பணிகள் முன்னெடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானம் தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.1.2 கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராமிய பொருளாதார பிரிவிற்கு சொந்தமான ரூபா 43,000,000 பெறுமதியான CAV – 5064 ஆம் ரேன்ஜ் ரோவர் ஜீப் வண்டி பழுதுபார்த்தல் நிறைவு செய்யப்பட்டு, ஓட்டப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, உரிய முறையில் பழுதுபார்த்தல் இடம் பெற்றுள்ளமையை உறுதி செய்யாது, ITMIS களின் கட்டமைப்பினுள் உள்ளடக்கப்பட்டு ரூபா 9,041,001 பெறுமதியான காசோலையொன்று வரையப்பட்ட அந்த நிறுவனத்திற்கு வழங்கப்படாது 06 மாதங்கள் தக்கவைக்கப்பட்டு 2024 யூலை மாதத்தில் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | CAV – 5064 ஆம் இலக்க ஜீப் வண்டி பழுதுபார்த்தலுக்கு உரிய 2023.12.29 ஆந் திகதிய Tax பற்றுச்சீட்டுக்கு ரூபா 9,041,001 ஆன காசோலையை வரைந்து காசுப்புத்தகத்தில் கொடுப்பனவிற்காக பதிவு செய்யப்பட்டது. எவ்வாறான போதிலும் அந்த வாகனங்கள் ஓட்டப் பரிசோதனையில் ஒரு சில குறைபாடுகளுடனான நிலைமையை காண்பித்தமையால் குறித்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வாகனம் முழுமையாக பழுதுபார்க்கப்படும் வரை காசொலையை குறித்த நிறுவனத்திற்கு வழங்காது தக்கவைத்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | பழுதுபார்த்தல் உரிய முறையில் இடம் பெற்றுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் கொடுப்பனவு உறுதிச்சீட்டொன்று தயாரிக்கப்பட்டு ITMES கணினி கட்டமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 1.6.1.3 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய | ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரின் இடர் கடன் | நிலுவை கடன் மீதியை அறவிட |

3 - 5 வருட காலப்பகுதிக்குரிய 71,615 ஆன கடன் மீதியும், பணிநீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 1-3 வருட காலப்பகுதிக்குரிய ரூபா 175,714 ஆன கடன் மீதியும், சேவையை விட்டுச்சென்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 1-5 வருடங்குள்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 410,933 ஆன கடன் மீதியும், 5-20 வருட காலப்பகுதிக்குரிய ரூபா 99,449 ஆன கடன் மீதியும், 20 வருடங்களை விஞ்சிய ரூபா 41,108 கடன் மீதியும் தீர்ப்பனவு செய்யப்படாது காணப்பட்டது.

மீதி தொடர்பில் தற்போது புதிய அமைச்சரவை தீர்மானத்தின் பணிகள் முன்னெடுக்கப்படுவதுடன், அது அங்கீகரிக்கப்பட்ட பின்னர், இந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டியவைகள் அவரது ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிட முடியும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.
முன்னாள் தபால் சேவைகள் முஸ்லிம் சமய விவகார அமைச்சில் சேவையாற்றிய அலுவலக உதவியாளர் ஒருவரிடமிருந்து 2019.10.25 ஆந் திகதியளவில் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 175,714 ஆன பணம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு 2022.06.21 ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

சேவையையை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 264,847 ஆன மீதி கால்நடை வளங்கள் பிரிவிற்கு உரியது ஆகும். அவற்றுள் 1-3 வருடத்திற்கு இடைப்பட்ட ரூபா 165,398 ஆன கடன் மீதியும், 5-10 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 62,519 தொகையும், 10 – 20 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 36,930 கடன் மீதியும் நிலவியது. சேவையை விட்டுச் சென்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 570,705 ஆன கடன் மீதியினுள் கிராமிய பொருளாதார பிரிவிலிருந்து சேவையை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதி உள்ளடங்கியுள்ளது.

நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### 1.6.1.4 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | CBF – 1592 பதிவு இலக்கமுடைய வாகனம் KOPIA செயற்திட்டத்தின் கீழ் வெகுமதியொன்றாக கிடைத்து இந்நாட்டிற்கு கொண்டு வரும் போது சுங்க வரியாக ரூபா 17,616,970 அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. 2018 நவம்பர் 16 ஆந் திகதிய HBMI / 73301 ஆம் இலக்க சுங்க பதிவேட்டில் குறித்த வாகனம் இலங்கை துறைமுகம் வரைவிலை (CIF) பெறுமதி ரூபா 4,643,904 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வாகனத்தில் பெறுமதியாக இலங்கை சுங்கத்திற்கு செலுத்திய பணம் மாத்திரம் CIGAS கணினிக் கட்டமைப்பினுள் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த வாகனம் தற்போது விவசாய திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்றமை இணங்காணப்பட்டுள்ளது. இது தொடர்பிலான அனைத்து விபரங்களும் அந்த திணைக்களத்திடமிரந்து பெற்று மேலதிக நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. | வாகனத்தின் முழுமையான பெறுமதி CIGAS கணினி கட்டமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் பயன்பாட்டில் இல்லாத போதிலும் CIGAS கணினிக் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 220,729,100 பெறுமதியான 40 வாகனங்கள் தொடர்பில் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்கமுடைய திறைசேரி செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 40 வாகனங்களின் தகவல்கள் CIGAS கணினியில் கட்டமைப்பிற்கு 2019 ஆம் ஆண்டிலேயே உள்ளடக்கப்பட்டது. அந்த வாகனங்களின் உரித்தினை மாற்றியமைத்து அந்த கணினி கட்டமைப்பு நாளது வரையாக்கப்பட்டிராமையால் நாளது வமரையாக்கும் பணிகள் இடம் பெறுகின்றன. | சரியானதும் நாளது வரையாக்கப்பட்டதுமான சொத்துக்கள் கணினிக் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (இ) | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க திறைசேரியின் பிரதிச் செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு முரணாக CIGAS கணினிக் கட்டமைப்பில் உள்ளடக்கப்படாத பெறுமதி ரூபா 148,074,850 ஆன 13 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 12 வாகனங்கள் எனுமாறு 25 வாகனங்கள் | 14 வாகனங்கள் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்காமையால், CIGAS கணினிக் கட்டமைப்பில் இருந்து அகற்றுவதற்கும், எஞ்சிய வாகனங்களை அவ்வாறே உள்ளடக்குமாறும் பதிவு உரித்தற்ற வாகனங்களை அமைச்சின் பெயருக்கு சுவீகரிக்கவும் நடவடிக்கை | உரித்து தீர்க்கப்பட்ட சொத்துக்களின் சரியான பெறுமதிகள் கணினிக் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சின் பயன்பாட்டில் உள்ளமை கணக்காய்வுக்கு அவதானிக்கப்பட்டது. | எடுக்கப்பட்டவாறு உள்ளது. | |
| (ஈ) | அமைச்சின் விவசாயப் பிரிவினால் பயன்படுத்தப்படும் 33 வாகனங்களின் பெறுமதியாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெறுமதி மற்றும் CIGAS கணினிக் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள வாகனங்கள் ஆகியவற்றின் பெறுமதிகளில் ரூபா 32,625,000 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் வாகனங்களின் மதிப்பீட்டு பெறுமதி CIGAS கணினிக் கட்டமைப்பினுள் உள்ளடக்கப்பட்டு அதனை நாளது வரையாக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும். | கணினிக் கட்டமைப்பிற்கு வாகனங்களின் சரியான பெறுமதி உள்ளடக்கப்பட வேண்டும். |
| (உ) | முன்னாள் விவசாய இராஜாங்க அமைச்சருக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 18,000,000 பெறுமதியான KW-8202 இலக்கமுடைய வாகனம் 2021 மார்ச் 21 ஆந் திகதி இடம் பெற்ற விபத்து தொடர்பில் 2022 யூலை 22 ஆந் திகதி நடாத்தப்பட்ட நி.பி 104(4) இன் கீழ் நட்டமொன்று தொடர்பில் இறுதி அறிக்கை பரிசோதனையில் கள விடயங்கள் தொடர்பில் அவதானிக்கப்படவில்லை.<br>முறையான அங்கீகாரமின்றி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கட்டுபெத்த அகற்றப்பட்ட வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை மற்றும் அகற்றப்பட்ட வாகனமொன்றாக பெயரிடுவதற்கு பெயரிடுவதற்கு டொயோடா நிறுவனம் நடவடிக்கை எடுத்திருந்தமை அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் முறையான முறையான நடைமுறைக்கமைய அகற்றப்பட்டமை தொடர்பில் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>அந்த வாகனத்திற்கு ரூபா 7,500,000 ஆன நட்டஈட்டினை செலுத்தும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் நடைமுறையை பின்பற்றாது தனியார் | விபத்து இடம்பெற்ற நேரங்களுடன் ஒப்பிடும் போது வாகனத்தில் பயணம் செய்தவர்களின் உயிர் ஆபத்து மற்றும் அதனிலிருந்து தப்புவதற்கு எடுத்த முயற்சியாக குறிப்பிடப்பட்டுள்ள விசேட விடயங்கள் தொடர்பில் வெளிப்படுத்துதல் நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பது அவதானிக்கப்படுகிறது.<br>விபத்து தொடர்பில் அமைச்சுக்கு முறையான அறிவித்தல் இடம்பெற்றுள்ளது விபத்து ஏற்பட்ட தினத்தின் பின்னரான தினத்தில் என்பதுடன் அதுவரையிலும் வாகனம் தொடர்பில் செயல்பட்ட நபர்களால் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அவதானிக்கின்றேன்.<br>டொயோட்டா லங்கா நிறுவனம் 2021.03.25 ஆம் திகதி இந்த வாகனத்தை அப்புறப்படுத்த வேண்டிய வாகனம் ஒன்றாக கருதி நடவடிக்கை எடுக்குமாறு விவசாய இராஜாங்க அமைச்சுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி இருந்தது. இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு | நிதிப்பிரமாணம் 104(4) இன் அடிப்படையில் நட்டமொன்றாக கருதி மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் அனைத்து விடயங்களையும் பழுதுபார்த்தல் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனமொன்றுக்கு பழுது பார்ப்பதற்கு 2022 திசெம்பர் 12 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டு 2023 மார்ச் 23 ஆந் திகதி காப்புறுதி நிறுவனம் அந்த கராஜிற்கு ரூபா 5,625,000 செலுத்தியிருந்தது. அமைச்சினால் கராஜூடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமை, செயலாற்றல் பிணை பெற்றுக்கொள்ளப்படாது பழுது பார்த்தலுக்கான மொத்த கிரயமும் வழங்குனருக்கு செலுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வினால் 2023 திசெம்பர் 21 ஆந் திகதி அந்த விபத்துக்குள்ளான வாகனம் பௌதீக ரீதியில் அவதானிக்கப்பட்டதுடன், இந்த அறிக்கையின் திகதி வரையிலும் பழுதுபார்த்தல் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொந்தமான மொரட்டுவையில் அமைந்துள்ள உடைந்த வாகனங்களை தரித்து வைக்கும் நிலையத்திற்கு வாகனத்தை அனுப்புதல் தொடர்பில் இந்த முறையான அறிவித்தல் அல்லது முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இயந்திரப் பொறியியலாளரின் பரிந்துரைக்கு அமைய அமைச்சில் பதிவு செய்யப்பட்ட கராஜ் ஒன்றிற்கு வாகனத்தை அனுப்பி இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த காப்புறுதி கம்பனியாலேயே முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது . பழுதுபார்த்தல்களுக்கு உடன்படிக்கையின் பிரகாரம் மொத்த தொகையும் காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுகின்றமையால் மற்றும் நிதி ரீதியாக எதுவித தலையீடு அமைச்சின் தரப்பினரால் மேற்கொள்ளப்படாமையால் செயலாற்றல் பிணை ஒன்றின் தேவைப்பாடு இல்லை என்பதை சுட்டி காண்பிக்கின்றேன். உரிய பழுதுபார்த்தல் நிறுவனத்தின் முகாமைத்துவத்துடன் மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி கலந்துரையாடலின் பிரகாரம் 90 நாட்களினுள் வாகனத்தை பழுது பார்க்குமாறு கடிதத்தின் மூலம் உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | 2023 ஆம் ஆண்டுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், விவசாய, பசளை மற்றும் கால்நடை வளங்கள் பிரிவில் 57 பொருள் வகைகளுக்கு உரிய 88 உருப்படிகளின் மிகை ஒன்றும் | 2023 ஆம் ஆண்டுக்கான பொருள் மெய்மையாய்வு சபையால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் சில உருப்படிகளின் பற்றாக்குறைகள் மற்றும் மிகைகளுக்கு அந்தந்த | மிகைகள் மற்றும் பற்றாக்குறை தொடர்பில் நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 115 பொருள் வகைகளின் 249 உருப்படிகளின் பற்றாக்குறையும் அவதானிக்கப்பட்ட போதிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரிவுகளின் உள்ளக ரீதியான பொருள் பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளமை காரணமாக ஏற்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு பிரிவிலும் பற்றாக்குறைய காணக்கூடிய அதே வேலை மற்றொரு பிரிவில் மிகையொன்றை காணக்கூடியதாக உள்ளது. இது தொடர்பில் கருத்திற்கொண்டு அந்தந்த பிரிவுகளின் பொருட்பதிவேடுகளை சரியாக பேணுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | |
| (எ) | 2021 ஜுன் 21 ஆம் தேதி கிராமிய பொருளாதார கிளையின் CAV-5064 இலக்கமுடைய ரேஞ்ச் ரோவர் ஜீப் வண்டி இயக்க முடியாத நிலைமைக்கு உள்ளாவதற்கு தாக்கம் அளித்த திட்டவட்டமான விடயங்கள் மற்றும் அதற்கு பொருள் கூற வேண்டிய நபர்கள் இனம் காணப்பட்டிருக்கவில்லை. இந்த வாகனத்தினை பழுது பார்ப்பதற்கு 5 சந்தர்ப்பங்களில் மதிப்பீடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டு ரூபா 3,076,878 தொகைக்கு மேற்கொள்ள இயலுமானதாக காணப்பட்ட பழுதுபார்த்தல் பணியானது 03 வருடங்கள் கடந்து மீளாய்வாண்டில் ரூபா 9,041,001 தொகைக்கு நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டு பழுதுபார்த்தல்களுக்கு உள்நாட்டு முகவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் உரிய பழுதுபார்த்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | 2023.04.19 திகதிய சிரேஷ்ட உதவி செயலாளரின் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டு, 2023.06.01 திகதி அதன் அறிக்கையின் பிரகாரம் வாகனத்தில் ஏற்பட்ட குறைபாட்டினை indicate செய்வதற்கு சமிக்ஞைகள் உரிய முறையில் செயல்படாமல் வாகனத்தின் குறைபாட்டுக்கு தாக்கம் அளித்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு பொறுப்பு கூற வேண்டிய நபர்கள் அல்லது தரப்பினர் தெளிவாக இனங்கான முடியாது என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேற்படி பழுதுபார்த்தலுக்கு 2021.07.28 திகதி உடைய மதிப்பீட்டு இலக்கம் QK 4164 கொண்ட ரூபா 3,076,878 தொகையான முதலாவது மதிப்பீட்டுக்கு போதிய நிதியேற்பாடு அமைச்சின் செலவின தலைப்பினுள் காணப்படாத காரணத்தால் 2021 ஆம் ஆண்டில் இந்த வாகனத்தின் பழுதுபார்த்தல் இடம்பெற்றிருக்கவில்லை. புதிய மதிப்பீடு ஒன்றினை பெற்றுக்கொள்ளுமாறு அமைச்சின் இயந்திர பொறியாளர் வழங்கிய அறிவுரைக் அமைய 2023.11.25 ஆண் திகதிய | ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாமைக்கான திட்டவட்டமான காரணங்கள் மற்றும் அதற்கு பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரை இனம் காணுவதற்கு மற்றும் துரிதமாக பழுதுபார்த்தலை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மதிப்பீடு இலக்கம் QK 4164 கொண்ட ரூபா 9,041,001 தொகையான புதிய திருத்தப்பட்ட மதிப்பீடு அக்சஸ் மோட்டார்ஸ் (தனியார்) கம்பனியால் அனுப்பப்பட்டுள்ளது. அதற்காக மேலதிக நிதியேற்பாடும் வழங்கப்பட்டுள்ளது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விவசாய மற்றும் கால்நடை வளங்கள் பிரிவினால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபா 1,568,540 தொகையான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கு உரிய பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், கால்நடை வளங்கள் பிரிவுக்கு உரிய ரூபா 858,302 தொகையான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுகளில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் பின்னிணைப்பு இலக்கம் iii இன் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பற்றுச்சீட்டுக்கள் 2024 ஜனவரி மாதத்தின் பின்னர் கிடைத்தமையால் கணக்குகளுக்கு உள்ளடக்குவதற்கு முடியாது உள்ளதுடன், எதிர்காலத்தில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளை சரியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கின்றேன். 2023 திசெம்பர் மாதம் செலவின கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் 2024 ஜனவரி மாதம் செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படாமையால் உரிய கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் பின்னிணைப்பு இலக்கம் iii இன் கீழ் உள்ளடக்க முடியாதுள்ளது. | அனைத்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களும் உரிய பதிவேடுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| அவதானிப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி**<br>**ரூபா** | **இணங்காமை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) நி.பி. 138 | 335,740 | கொடுப்பனவுகளுக்கு வேறு உறுதிச் | 03 பெயர்வு பற்றுசீட்டுகளில் 02 | உறுதி சீட்டுகளுக்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | சீட்டுகள் பின்னரான சந்தர்ப்பங்களில் சான்று படுத்தப்படுவதை தடுப்பதற்கு அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், அந்த ஏற்பாடுகளை கருத்தில் கொள்ளாது கிராமிய பொருளாதார பிரிவினால் 03 பெயரளவு பற்றுசீட்டுக்கள், 03 பிரதிகள் மற்றும் விலை கோரல் அடிப்படையாகக் கொள்ளப்பட்டு 07 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பற்றுசீட்டுக்கள் யுனைடெட் மோட்டார்ஸ் லங்கா தனியார் கம்பெனி அனுராதபுர கிளையினால் வழங்கப்பட்ட ரூபா 55,658 மற்றும் ரூபா 113,832 தொகையான பற்றி சீட்டுகள் ஆகும். பெயரளவு பற்றி சீட்டுகள் ஆபீஸ் நெட்வொர்க் தனியார் கம்பெனிக்கு உரியவையாக காணப்பட்டதுடன் அதற்குரிய Tax Invoice பத்திரம் உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்டிருந்தது. அமைச்சினால் பயன்படுத்தப்படும் Dongle இதற்காக டயலொக் கம்பனியிலிருந்து பட்டியல்களின் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்படாததுடன், அந்த பட்டியல்கள் email மூலம் அமைச்சுக்கு அனுப்பப்பட்ட பின்னர் அதன் பிரதி ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டு கொடுப்பினை மேற்கொள்ளல் பொதுவான நடைமுறை ஒன்றாகும். | கொடுப்பினைவு மேற்கொள்ளும் போது உண்மைபடியான அல்லது சான்று படுத்தப்பட்ட பட்டியல்கள் அல்லது பற்றி சீட்டுக்களின் மூலப்பிரதிகள் இணைக்கப்பட்டு இருக்க வேண்டும். |
| (ஆ) | 2021 ஏப்ரல் 21 ஆந் திகதிய பெறுகைகள் கையேட்டுக்கான இணைப்பு 38 | 596,000 | ரூபா 500,000 தொகைக்கு மேற்பட்ட பழுது பார்த்தல் களுக்கு வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2023 ஆம் ஆண்டில் KY – 5535 இலக்கமுடைய வாகனத்துக்காக | KY 5535 இலக்கமுடைய வாகனம் 2023.12.22 திகதி அனுப்பப்பட்ட ரூபா 596,000 பெறுமதியான பழுது பார்த்தல் அமைச்சின் சிறு பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு 2023.11.08 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளதுடன், 2023.12.21 ஆம் திகதி | பெறுகைகள் வழிகாட்டல்களின் பிரகாரம் உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மேற்படி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அக்குழுவினால் பழுதுபார்த்தலுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |

**2.3 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆன் திகதியில் உள்ளபடியான 02 கணக்குகள் 05 சந்தர்ப்பங்களில் வைப்பு செய்யப்பட்ட 02 வருடங்களை கடந்த ரூபா 740,439 தொகையான பொது வைப்புக்கள் தொடர்பில் நிதி பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 2,232 தொகை அரச வருமானத்திற்கு எடுக்கப்பட்டு ரூபா 245,532 தொகை விதவைகள் மற்றும் அனாதைகள் நிதியத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. லாரன்ஸ் லிக்விட், வரையறுக்கப்பட்ட பகோ புட்ஸ் கம்பெனி மற்றும் கென்கரா ஹோல்டிங்ஸ் நிறுவனங்களில் ரூபா 100,000 தொகையான விலை கேள்வி காப்பீட்டு தொகையை விடுவிப்பதற்கு அந்த நிறுவனங்களின் மூலம் வழங்கப்பட வேண்டிய முகவரி மற்றும் பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிறாததுடன் கடிதங்கள் மூலம் அந்த நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வாரியபொல பிரதேச சபை வைப்புகள் தொடர்பில் உரிய பதிவேடுகள் இதுவரையிலும் கிடைக்காமல் 2024 ஆம் ஆண்டில் இந்த வைப்பு மீதி அரச வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | வைப்புக்களை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.4 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டில் ரத்து செய்யப்பட்ட 03 இராஜாங்க அமைச்சுக்களின் 7040749, 7040184 மற்றும் 7040733 ஆகிய 03 வங்கி கணக்குகளின் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான வங்கி கூற்றின் | முன்னர் நிலவிய ராஜாங்க அமைச்சுகள் தற்போது விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் பிரிவொன்றாக பேணி செல்லப்படுகின்றமையால் அதன் பிரகாரம் வங்கிக் கணக்குகளின் பெயர்களை மாற்றுவதற்கு | செயற்பாட்டில் இல்லாத வங்கி கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அமைச்சின் |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் மீதிகள் முறையே ரூபா 223,538,157, ரூபா 17,333,992 மற்றும் ரூபா 49,801,314 ஆக காணப்பட்டதுடன் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் அந்த வங்கி கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த வங்கி கணக்குகள் இரத்துச் செய்யப்பட்ட ராஜாங்க அமைச்சுகள் இரண்டின் செயலாளர்களின் பெயர்களில் தொடர்ந்தும் பேணி செல்லப்படல் தொடர்பில் கடந்த வருடத்தில் கணக்காய்வில் சுட்டி காண்பிக்கப்பட்ட போதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | தற்போதைய செயலாளர் பெயரில் வங்கிக் கணக்குகள் பேணி செல்லப்பட வேண்டும். |
| (ஆ) | செயலாளர், கமநல, கிராமிய பொருளாதார அலுவலர்கள் மற்றும் கால்நடை வளங்கள் அமைச்சின் பெயரில் இலங்கை வங்கியில் காணப்படும் 7040507 இலக்கமுடைய செயலிழந்த வங்கிக் கணக்கினை நிதிக்கூற்றுகளில் காண்பிப்பதற்கு அல்லது அறிக்கையின் திகதி வரையிலும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சு அவ்வப்போது மாற்றமடைந்தமையால் செயலிழந்துள்ள இந்த கணக்குகளை பரிசோதித்து மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | செயலிழந்து வங்கிக் கணக்குகள் தொடர்பில் நிதி கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2023 டிசம்பர் 31 ஆண் திகதி வரையிலும் முறையை ரூபா 279.8 மில்லியன், ரூபாய் 304 மில்லியன் மற்றும் ரூபா 191 மில்லியன் செலவிடப்பட்டு மட்டக்களப்பு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலையங்களில் நிர்மான பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் அந்த நிலையங்கள் | மட்டக்களப்பு விசேட பொருளாதார மத்திய நிலையத்தினை திறப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசியமான அபிவிருத்தி பணிகளுக்காக 2023 ஆம் ஆண்டில் ரூபா 4,820,350 செலவிடும் மேற்கொள்ளப்பட்டு 2023.12.31 ஆம் திகதி அந்தப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.<br><br>வவுனியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தினை | பொருளாதார மத்திய நிலையங்களை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டில் மேற்படி பொருளாதார மத்திய நிலையங்களுக்கு மின்சார கட்டணம் ரூபா 1.32 மில்லியனும், பாதுகாப்பு சேவை கட்டணங்களாக ரூபா 9.21 மில்லியனும் என ரூபா 10.53 மில்லியன் கூட்டுத்தொகையான பொருளாதார மத்திய நிலையங்களை திறக்காத காரணத்தினால் அரசாங்கத்திற்கு செலவினை சுமை ஏற்பட்டிருந்தது. | திறப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசியமான அபிவிருத்தி பணிகளுக்காக 2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் கீழ் ரூபா 4,002,604 செலவிடப்பட்டு 2023.12.31 ஆம் திகதி அதன் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.<br><br>யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலையத்தினை திறப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசியமான அபிவிருத்தி பணிகளுக்காக 2023 ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் கீழ் ரூபா 6,984,365 நிதி செலவிடப்பட்டு 2023.12.31 அளவில் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.<br><br>2021 முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலும் மின்சார பட்டியல்கள், நீர் பட்டியல்கள் மற்றும் பாதுகாப்பு சேவை கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதுடன் மேற்படி மட்டக்களப்பு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பொருளாதார மத்திய நிலையங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பொருத்தமாக பூர்த்தி செய்து பின்னர் 2024 ஆம் ஆண்டு திறப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

## 3.2 எதிர்பார்த்த பூர்த்தி மட்டத்தை அடைந்து கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில், விவசாயத்தில் இளைஞர்களை தக்கவைக்கும் (தருண கம்மான வேலைத்திட்டம்) வேலைத்திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை, காலி, வவுனியா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு ரூபா 120 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒட்டுமொத்தமாக 84.7 சதவீத நிதி முன்னேற்றம் காணப்பட்ட போதிலும், குருநாகல் மாவட்டத்தில் தருண | சீரற்ற காலநிலை காரணமாக, துணை உணவுப் பயிர்கள் பயிர்ச்செய்கையை தொடங்குவதற்கு ஏற்றதாக இல்லாததால், இந்த செயற்திட்டம் தொடங்கப்படாமல் உள்ளது. திசெம்பர் மாதத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டுமாயின் மிளகாய்ச் செய்கையை மாத்திரம் ஆரம்பிக்க வேண்டுமென கம்நல திணைக்களம் | உத்தேச செயல்திறன் மட்டத்தை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கம்மான வேலைத்திட்டத்தின் நிதி முன்னேற்றம் குறைந்தபட்சமாக 6 வீதமாக காணப்பட்டதுடன் அந்த விவசாயிகளுக்கு 1 கிலோ கலப்பின மிளகாய் விதைகளே வழங்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது. | பரிந்துரைத்துள்ளதாக அம்பன்பொல பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். தற்போதைய நிலவரத்தின் அடிப்படையில், மிளகாய்ச் செய்கையை மாத்திரம் ஆரம்பிப்பது பொருத்தமானது என தீர்மானிக்கப்பட்டதால், குருநாகல் மாவட்ட விவசாயப் பணிப்பாளர், கமநல திணைக்களத்தின் நிகவெரட்டிய விதை அலுவலகத்திற்கு, உரிய விதைகளை விநியோகிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன் போது, சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் 1 கிலோ MICHHY1 மிளகாய் விதைகள் இருந்ததால் அந்த அளவினை மட்டுமே வாங்க வேண்டியிருந்தது. | |
| (ஆ) | 2023 தேசிய வரவு செலவு திட்டத்தில் கால்நடை விருத்தி மற்றும் பண்ணை அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 50 மில்லியன் தொகையில் ரூபா 35.3 மில்லியன் நிதியானது கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் நடைமுறைப்புடுத்தப்பவிருந்த விந்தணு தானம் செய்யும் பசுக்களை குண்டசாலை செயற்கை கருவூட்டல் நிலையத்திற்கு கொள்வனவு செய்யும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது. பெறுகைக்கு பொருத்தமான விலைக்கேள்வியார் முன்வராத காரணத்தால் கால்நடை விருத்தி மற்றும் பண்ணை அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் 24.02 சதவீதமாக மிகக் குறைவாக இருப்பதை அவதானிக்க முடிந்தது. | “கால்நடை விருத்தி மற்றும் பண்ணை அபிவிருத்தி” செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டிலிருந்து ரூபா 35.3 மில்லியன் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டு இனப்பெருக்கத்திற்கான விலங்குகளை இறக்குமதி செய்வதற்காக இந்த திணைக்களத்தினால் இரு தடவைகள் பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.முதற் தடவை முன்வைக்கப்பட்ட ஒரேயொரு விலைக்கேள்வியாளருக்கு விலங்குகளை இறக்குமதி செய்யும் திறன் இல்லாமை மற்றும் தொடர்புடைய விவரக்குறிப்புகளைப் பூர்த்தி செய்ய இயலாமை காரணமாக இரண்டாவது விலைக்கேள்வியை நிராகரிக்க வேண்டியிருந்தது. இரண்டாவது விலைக்கேள்வி திறத்தல் 2023.09.04 ஆந் திகதி நடத்தப்பட்டதுடன், விலங்குகளை இறக்குமதி செய்ய முடியாது என்று கண்டறியப்பட்டபோது, அந்த நிதியேற்பாட்டினை கால்நடை விருத்திக்கு உரிய பிற | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை கால்நடை வளங்கள் பிரிவினால் பரிசோதிக்கப்பட்டு புதிய இனப்பெருக்க மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்த போதுமான காலம் இல்லை என கால்நடை வளங்கள் அபிவிருத்திப் பிரிவு தெரிவித்துள்ளது. | |

**3.3 நட்டங்கள் மற்றும் இழப்புகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நட்டத்தை அறவீடு செய்வதிலான தாமதங்கள் அல்லது அறவிட தவறியமையின் அடிப்படையில் 47 சம்பவங்களுக்குரிய முன்கொண்டுவரப்பட்டிருந்த நட்ட மீதியான ரூபா 30,231,762 இற்கு நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிப்பிரமாணம் 109 இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறதா எடுக்கப்படாத 47 வாகனங்களிடையே இதுவரையிலும் 10 வாகன விபத்துக்கள் தொடர்பில் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய வாகன விபத்துக்கள் தொடர்ந்து நிதிப்பிரமாணம் 109 இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளவாறு உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | நி.பி. பிரகாரம் நட்ட மீதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 மார்ச் 21 ஆம் தேதி விபத்துக்குள்ளாகிய மீலாய் வாண்டி இறுதி வரையிலும் ஓட்டத்திற்கு உகந்த நிலைக்கு உள்ளாக்கப்படாத KW-8202 இலக்கமுடைய வாகனத்தின் நட்டம் தொடர்பில் நட்டங்கள் மற்றும் பதிவழித்தல் பதிவேட்டில் அல்லது நிதி கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | KW 8202 இலக்கம் கொண்ட வாகனத்தின் நட்டம் தொடர்பில் நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் பதிவேட்டில் மற்றும் நிதி கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு போதிய தகவல்கள் கிடைக்காமல் பதிவேடுகளில் பதிவு செய்யப்படாததுடன் இதுவரையிலும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. | நட்டத்தின் பெறுமதி மற்றும் பதிவழித்தல் பதிவேட்டின் மற்றும் நிதி கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விவசாய அமைச்சின் உர செயலகத்தின் கண்காணிப்பிலான நலிவுகள் மற்றும் உர மானியம் இறக்குமதி போன்றவற்றுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவை குறுங்கால வங்கி கடன் மூலம் வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டு அந்தக் கடன் உரிய காலத்தில் செலுத்தப்படாமல் நீண்ட கால கடன்களாக மாற்றப்பட்டு அதன் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட உரத்திற்கான கிரயத்திற்கு மேலதிகமாக பெருந்தொகையான கிரயம் கடன் வட்டியாக செலுத்துவதற்கு நேர்ந்தது. 2023 ஆம் ஆண்டில் உரத்திற்காக நிதியைப் பாட்டின் கீழ் வ/ப லங்கா உர கம்பனி மற்றும் வ/ப கொழும்பு கமர்சியல் உர கம்பனி ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களுக்காக முறையை ரூபா 9,804,086,114 மற்றும் ரூபா 6,475,566,743 ஆக ரூபா 16,279,652,857 கூட்டுத்தொகையான மேலதிக வட்டி செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது மேலும் அரச ஒரு கம்பெனிகள் இரண்டின் கீழ் ரூபா 3,723,072,859 கூட்டு பெறமதியான பிற்போடப்பட்ட வட்டி பெறுமதி நீண்ட கால கடனாக மாற்றப்படும் போது அதில் உள்ளடங்கி இருந்ததுடன், அதன் காரணமாக வட்டிக்கு வட்டி செலுத்தப்பட்டவாறு உள்ளமை தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. | 20/0293/204/022 ஆம் இலக்க மற்றும் 2020.02.09 ஆந் திகதிய “அரச உரக் கம்பனிகளால் முதிர்வடைந்த நாணய கடிதங்களுக்கு மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய பெறுமதிகளை காலக்கடன்களாக மாற்றுதல்” எனும் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | உரு மானியங்கள் இறக்குமதியின் கண்காணிப்பு மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பணம் உரிய நேரத்தில் பொதுத் திறைசேரியிலிருந்து விடுவிக்கப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

### 3.5 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் பிரதான கணக்கிட்டு உத்தியோகத்தரால் நிதிப்பிரமாணம் 452(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு ஐயவினா பதிவேடு | 2024 மார்ச் 17 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்ட 19 கணக்காய்வு ஐயவினாக்களில் 14 கணக்காய்வு ஐயவினாக்கள் பொருளாதார மத்திய | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(உ) பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | உரிய காலத்தின் பின்னர் பரிசோதிக்கப்பட்டு கிடைக்க பெற்றுள்ள கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டி காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அந்த கணக்காய்வு ஐயவினாக்களுக்கு உடனடியாக பதில் வழங்கப்பட வேண்டிய போதிலும், கிராமிய பொருளாதார பிரிவிற்கு 2023 ஆம் ஆண்டுக்கு வழங்கப்பட்ட 22 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு இந்த அறிக்கையின் திகதி வரையிலும் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிலையங்களுக்கு உரிய மற்றும் எஞ்சிய 05 கிராமிய பொருளாதார பிரிவிற்கு உரியன ஆகும். அந்த 05 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு தற்போது பதில் வழங்கப்பட்டுள்ளதுடன், பொருளாதார மத்திய நிலையங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 14 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு உரியதாக துரித பதில் வழங்குமாறு கணக்காய்வு ஐயவினாக்களின் பிரதிகள் ஒவ்வொரு பொருளாதார மத்திய நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் உரிய பதில்கள் கிடைத்தவுடன் அவற்றை பரிசோதித்து உரிய பதிலை துரிதமாக முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.. | செய்யப்பட வேண்டும |

**3.6 முகாமைத்துவ நலிவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்த அறிக்கை வெளியாகும் நாள் வரை குருந்துவத்தை, தம்புத்தேகம, நுவரெலியா, பிரியந்தலா, நாரஹேன்பிட்டி, இரத்மலானை ஆகிய பொருளாதார மத்திய நிலையங்களின் காணிகள் கிராமிய பொருளாதாரப் பிரிவினால் பொறுப்பான அமைச்சிற்கு சுவீகரிக்கப்படவில்லை. | குருந்துவத்தை பொருளாதார மத்திய நிலையங்கள் அமைந்துள்ள காணியை சுவீகரிப்பது தொடர்பான பிரேரணை காணி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br><br>தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலைய காணி விவசாய அமைச்சின் பாவனைக்கான நிபந்தனைகளுடன் 2003.08.28 அன்று மகாவலி அதிகாரசபையினால் விடுவிக்கப்பட்டுள்ளது.<br><br>நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான காணியை குத்தகை அடிப்படையில் சுவீகரிப்பதற்காக கூட்டு அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | குறித்த காணிகளை பொறுப்பான அமைச்சிடம் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வரையறுக்கப்பட்ட பிலியந்தலை போகுந்தர கூட்டுறவு சேவைகள் சங்கம் மற்றும் வர்த்தக சந்தைப்படுத்தல் அபிவிருத்தி கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சு ஆகியவற்றுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பொருளாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br><br>நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையம் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அதனை மீளவும் அமைச்சிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br><br>இரத்மலானை விசேட பொருளாதார மத்திய நிலையம் அமைந்துள்ள காணியின் உரிமை தொடர்பில் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் செயலாளர் காணி ஆணையாளர் நாயகத்திடம் ஆலோசனை கோரியுள்ளார். | |
| (ஆ) | நாரஹேன்பிட்டிய விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் இலக்கம் 7 மற்றும் 8 ஆம் இலக்கமுடைய 02 களஞ்சியசாலை வளாகத்திற்கு அரச வர்த்தக கூட்டுத்தாபனம் எவ்வித வரி வாடகையும் செலுத்தாமல் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் அவை தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | இலங்கை அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டஇலக்கம் 08 கொண்ட களஞ்சியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு, உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை வாடகையை அறவிடுவதற்கு மற்றும் இலக்கம் 07 கொண்ட களஞ்சியத்திற்காக உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு நிலுவை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | உரிய முறையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு நிலுவை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இரத்மலானை பொருளாதார மத்திய நிலையத்தில் 16 கடைகள் உள்ளன, அவை இந்த அறிக்கையின் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டது. | இரத்மலானை விசேட பொருளாதார மத்திய நிலையத்திலுள்ள 16 மீன் சந்தை வளாகங்கள் செயலிழந்திருந்ததுடன், அதனை பல்வேறு சந்தர்ப்பங்களில் விலைக்கேள்வி கோர நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், எந்தவொரு | வளங்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விலைக்கேள்வியாளரும் முன்வராமையால் தேவையின் அடிப்படையில், சேமிப்பக வளாகமாக மாற்றுவது பொருத்தமானது என 2023.05.19 ஆந் திகதி நடைபெற்ற முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. | |
| (ஈ) | குருந்துவத்தை, தம்புள்ளை மற்றும் நாரஹேன்பிட்டி ஆகிய பொருளாதார மத்திய நிலையங்களில், 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வியாபார வளாக நிலுவை கடை வாடகை மற்றும் தண்டப்பண வாடகை ரூபா 153,476,465 நிலுவையாக காணப்பட்டது. நிலுவைத் திகதி தொடர்பான விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாமையால் நிலுவையாக காணப்பட்ட காலத்தை கண்டறிய முடியாததாக காணப்பட்டதுடன், அந்த மீதியை அறவிடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தம்புள்ளை, குருந்துவத்தை மற்றும் நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையங்களில் 2023.12.31 ஆந் திகதி நிலுவையில் உள்ள ரூபா 153,476,465 கடை வாடகைக்கு உரியதாக நிலுவையில் உள்ள தேதிகள், நிலுவை நிலுவைகள் குறித்த காலப் பகுப்பாய்வுகள் மற்றும் நிலுவைத் தொகைகளை வசூலிக்க முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த துரித அறிக்கையை சமர்ப்பிக்குமாறு முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அறிக்கைகள் கிடைத்ததும், உடனடியாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். | நிலுவை கடை வாடகை மற்றும் தண்டப்பணம் ஆகியவற்றை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2016 ஏப்ரல் 08 முதல் 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி வரை அதாவது 05 வருட காலத்திற்கு விவசாய அமைச்சுக்கான வாடகை அடிப்படையில் வ/ப டீ.ஜீ. ஜெயசிங்க டுவர்ஸ் அண்ட் டிரான்ஸ்போர்ட் தனியார் கம்பனியுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட குத்தகை ஒப்பந்தம் இலக்கம் 2178 இன் படி DPJ TOWER என பெயரிடப்பட்ட கட்டிட வளாகம் குத்தகையாளருக்கு மீண்டும் 2020 சனவரி 31 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்ட போதிலும், அமைச்சினால் அந்த குத்தகைதாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 63 மில்லியன் மீள செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்புத்தொகையை இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | குத்தகை ஒப்பந்தத்தின்படி, 2016.04.08 ஆந் திகதி முதல் 2021.04.07 ஆந் திகதி வரையிலுமான 05 வருட காலப்பகுதிக்கு கட்டிட வைப்புத்தொகை குத்தகைதாரருக்குத் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். ஆனால் ரூபா 63 மில்லியன் வைப்புத் தொகையை ஒப்புக்கொண்டபடி செலுத்தவில்லை என்பதுடன், அந்த நிறுவனத்திற்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டு அவர்களும் பதிலளித்தனர். ஆனால் மேற்படி தரப்பினர் முன்வைக்கும் விடயங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்பதால், வைப்புத் தொகையை | வைப்புத் தொகை அறவிடப்பட வேண்டும். |

அறவிடுவதற்கு அமைச்சிற்கு சட்ட நடவடிக்கை எடுக்க நேர்ந்துள்ளது.

## 4. மனிதவள முகாமைத்துவம்

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

விவசாய அமைச்சின் விவசாயப் பிரிவின் பதவிகள் 170, உரங்கள் பிரிவின் 29 பதவிகளும், கால்நடை வளங்கள் பிரிவின் 36 பதவிகளும், கிராமியப் பொருளாதாரப் பிரிவின் 18 பதவிகளும், தேசிய உரச் செயலகத்தின் 25 பதவிகளும் நிலவியதுடன், அது தொடர்பிலான விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| பிரிவு | சிரேஷ்ட நிலை | மூன்றாம் நிலை | இரண்டாம் நிலை | ஆரம்ப நிலை |
|---|---|---|---|---|
| விவசாய பிரிவு | 7 | 1 | 146 | 16 |
| உரங்கள் பிரிவு | 5 | | 20 | 4 |
| கால்நடை வளங்கள் பிரிவு | 4 | 1 | 19 | 12 |
| கிராமிய பொருளாதார பிரிவு | 4 | 2 | 8 | 4 |
| தேசிய உரச் செயலகம் | 18 | 1 | 6 | - |

**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**

வேளாண் துறையில் காலி பணியிடங்களை நிரப்புவது குறித்து சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. உரத்துறையின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய உர செயலகத்தில் உள்ள இந்த பணியிடங்கள் அதிகாரியின் தனிப்பட்டதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை 18 அதிகாரிகள் ஓய்வு பெற்ற நிலையில், அதற்கான புதிய ஆள்சேர்ப்பு எதுவும் செய்யப்படவில்லை.

**பரிந்துரை**

கால்நடைத் துறை காலியிடங்கள் இன்னும் உள்ளன. ஊரகப் பொருளாதாரத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பக் கோரி செயலாளருக்கு கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. தற்போதைய தேவைக்கேற்ப பணியாளர்களின் எண்ணிக்கையை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.